# ஒதுக்கீட்டுத் தலைப்பு 108 – தபால் சேவைகள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012

இவ்வறிக்கை இரு பகுதிகளாலானவை

1 ஆம் பகுதி – அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை

2 ஆம் பகுதி – ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விரிவான அறிக்கை

## 1 ஆம் பகுதி

## தபால் சேவைகள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை

### 1. அமைச்சின் கீழான திணைக்களம்

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 308 | அஞ்சல் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுத் தலைப்பு

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்கும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்குமான மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 8,705,989,000 ஆகும். மீளாய்வாண்டு முடிவில் அதில் ரூபா 8,568,197,717 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 114,599,436 முதல் ரூபா 23,191,847 வரை, அதாவது, மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 38.8 சதவீதம் முதல் 0.27 சதவீதம் வரையில் அமைந்திருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதியேற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருவன | மூலதனம் | மீண்டுவருவன | மூலதனம் | மீண்டுவருவன | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 108 | தபால் சேவைகள் அமைச்சு | 82,359,000 | 213,071,000 | 75,582,446 | 105,248,118 | 6,776,554 | 107,822,882 |
| 308 | அஞ்சல் திணைக்களம் | 8,266,059,000 | 144,500,000 | 8,257,699,996 | 129,667,157 | 8,359,004 | 14,832,843 |
| | மொத்தம் | 8,348,418,000 | 357,571,000 | 8,333,282,442 | 234,915,275 | 15,135,558 | 122,655,725 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அஞ்சல் திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டில் வருமானம் சுட்டிலக்கத்திற்காக ரூபா 4,600,000,000 இற்கான வருமானம் மதிப்பீடு செய்திருந்ததுடன், வருமானச் சேகரித்த தொகை ரூபா 4,952,411,855 ஆகும். அதற்கமைய, மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 107.7 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டது.

| வருமானம் கணக்களிப்பு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | அதிகரித்த சேகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| தபால் மா அதிபர் | 20-01-02-00 | 4,600,000,000 | 4,952,411,855 | 352,411,855 | 7.7 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றம் விதித்துள்ள எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் பொருட்டுப் பாராளுமன்றம் விதித்த கீழே குறிப்பிடப்பட்ட எல்லைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. விபரம் கீழே காணப்படுகின்றது.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானது | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானது | அதிகூடிய எல்லை | உள்ளபடியானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 108 | 10801 | 3,500,000 | 2,160,200 | 1,900,000 | 2,441,951 | 40,000,000 | 12,945,712 |
| 308 | 30801 | 600,000,000 | 572,265,376 | 480,000,000 | 593,326,906 | 1,975,000,000 | 1,682,238,522 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலான கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 338,352,809 வரவு மீதியிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மீதி |
|---|---|
| தபால் சேவைகள் அமைச்சு | 2,632,677 |
| அஞ்சல் திணைக்களம் | 335,720,132 |

**(ஆ) பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 305,371,277 ஆகும். இது தொடர்பான விபரம் கிழே காணப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| தபால் சேவைகள் அமைச்சு | 6000/0000/0015/0022/000 | 3,825,803 |
| அஞ்சல் திணைக்களம் | 6000/0000/00/0015/0162/000 | 48,144,232 |
| | 6000/0000/00/0015/0172/000 | 253,401,242 |

## II ஆம் பகுதி

### ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விரிவான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 108 – தபால் சேவைகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தபால் சேவைகள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 13 ஆந் திகதியன்று அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள், கருத்துரைகளும் கண்டுபிடிப்புகளும் கணக்காய்விற்குக் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிச் செவ்வையின் அடிப்படையில் அமைந்தனவாகும். அம் மீளாய்வினதும் பரிசீலனையினதும் நோக்கெல்லையும் அளவும்

எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் நேரம் எனும் வரையறைக்குட்பட இயன்றளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளும் விதத்தில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களற்ற கணக்குகள் மற்றும் கணக்கீட்டுக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்பித்தலுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் யாவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கை மற்றும் ஏடுகள் என்பவற்றின் பிரகாரம் அஞ்சல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று, இங்கு (அ) முதல் (எ) வரையிலான பொது அவதானிப்புகள், கீழே 1:4 முதல் 1:10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்படும் பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் நீங்கலாக திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டது.

(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

2012 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகளை அமைச்சு கணக்காய்விற்காகச் சமர்ப்பித்திருந்தது.

| தலைப்பு /விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 108 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 10801 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக்கூற்று |

(ஆ) பதிவேடுகளையும் புத்தகங்களையும் பேணாதிருத்தல்

கீழே குறிப்பிடப்பட்ட பதிவேடுகள் அமைச்சினால் முறையாகவும் நாளது வரையாக்கப்பட்டும் பேணப்படாமை தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| ஆளுக்குரிய வேதனப் பதிவேடு | நி.பி 453 மற்றும் 2009 ஜுன் 9 ஆந் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் DMA/2009 (1) |
| கணனித் துணைப்பாகப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய 1A1/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை |

(இ) பாதீட்டு முரண்

(i) இரண்டு செலவின விடயங்களுக்கான மொத்த தேறிய நிதியேற்பாடாகிய ரூபா 390,000 எஞ்சியிருந்தது.

(ii) இருபத்தொரு செலவின விடயங்களுக்கு அதிக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டதன் பின்னரான மிகுதி அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 6 முதல் 100 சதவீதம் வரையிலாக அமைந்திருந்தது.

(ஈ) அரச செலவின முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டிற்கென பாராளுமன்றம் அங்கீகரித்த வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் முறையே 2 சதவீதம் 9 சதவீதம் என

மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினங்களில் சேமிக்கப்பட வேண்டும். அமைச்சு அவ்வாறே ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் சேமித்திருந்தது.

(உ) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவின முகாமைத்துவம்

எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினத்திற்கென பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிக்குள் செலவினம் முகாமைத்துவஞ் செய்யப்பட வேண்டும் எனவும், அதற்காக எதுவித மேலதிக தொகையும் வழங்கப்படமாட்டாது எனவும் நிதிப் பிரமாணம் 66 மூலம் நிதியேற்பாட்டு மாற்றங்களைத் திறைசேரி அங்கீகரிக்காதெனவும் 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ள போதும், அவ்வறிவுறுத்தல் கருத்திற்கொள்ளப்படாது அச்செலவின விடயங்களுக்கென திறைசேரி மேலதிக ஏற்பாடாக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 500,000 பெறப்பட்டிருந்தது.

(ஊ) கட்டுநிதிக் கணக்கு

2013 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் அமைச்சு தீர்த்து வைக்காத கட்டுநிதி மீதியின் கூட்டுத்தொகை ரூபா 927,297 ஆகும். அதில் ரூபா 737,955 மீதியானது 2008 ஜனவரி 25 தொடக்கம் நிலவி வருவதாகும்.

(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

விடய இலக்கம் 10801 - அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாயிருந்த மீதியின் கூட்டுத்தொகை ரூபா 888,858 ஆகும் நிலுவையாக உள்ள அம் மீதியை அறவிடுவதில் தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலைமையில் இருந்தது.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சு செயலாளர்கள் மாகாண சபைப் பிரதான செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் என்பவர்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய, 2010 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும். அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தது.

### 1.4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 1.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கிணங்க, பொது நிதிப் பணிப்பாயர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 2010 மற்றும் எதிர்வரும் காலங்களுக்கென அமைச்சு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமாயினும் 2012 ஆம் ஆண்டின் பொருட்டுத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் ஒருங்கிணைந்த திட்டத்திற்கேற்பத் தயாரிக்கப்படாதிருந்தது.

### 1.4.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. திறைசேரியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உள்ளகக் கட்டுப்பாடு முறைமையை முன்னேற்றுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

ii. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் திறைசேரிப் பிரதிச் செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்த போதும், அஞ்சல் சேவைகள் அமைச்சின் கீழ் செயற்படும் அஞ்சல் அலுவலகங்களை இணையதளப்படுத்தும் செயற்திட்டத்தின் நிதி முகாமையாளர் பதவிக்கும் அஞ்சல் சேவைகள் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வின் சுயாதீனத்தை இது வெகுவாகப் பாதித்திருந்தது.

iii. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களாக ஆட்சேர்க்கப்பட்டிருந்த உத்தியோத்தர்கள் பட்டதாரிப் பயிலுநர்களானதுடன் அவர்களது அறிவு, திறமை, பொறுப்பு, தொழில்சார் தர்மம் தொடர்பாகப் போதிய பயிற்சியை வழங்குவதற்கு உள்ளக, வெளியகப் பயிற்சித் தொடர் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**1.5 சொத்து முகாமைத்துவம்**

**வெளிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

முன்னாள் அமைச்சருக்கும் அவரது பதவியணியினருக்கும் வழங்கப்பட்ட ரூபா 79,130 பெறுமதியான 02 கையடக்கத் தொலைபேசிகளை அமைச்சிடம் திருப்பி ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 இணக்கமின்மைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| 1985 மே 10 ஆந் திகதிய 289 ஆம் இலக்க மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2002/01 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | - | அமைச்சின் வாகனக் குழாமினது வாகனங்களில் அரச இலச்சினையும் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2010 நவம்பர் 22 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் | | இவ்வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தபால் சேவைகள் அமைச்சு நிறுவப்பட்டுள்ள போதும், வாகனங்களின் பதிவு இவ்வமைச்சிடம் ஒப்படைக்கப்படாது முன்பிருந்த தபால் மற்றும் தொலைத் தொடப்புகள் மற்றும் திட்டமிடல் அமைச்சுகளின் செயலாளர்களது பெயரில் 16 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அவற்றைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2013 ஜனவரி 10 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத் தீர்மானங்கள் | 2,201,139 | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமின்றி தபாலகங்களை இணையதளமயப்படுத்தும் செயற்திட்டத்திற்கு பகுதிநேர அடிப்படையிலும் முழுநேர அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படும் படியைத் திருப்பி அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 செயற்திட்ட அமுலாக்கலில் நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தபாலகங்களை இணையதளமயப்படுத்தும் செயற்திட்டத்தை அமுலாக்கவதற்காக 2007 ஒக்டோபர் 31 ஆந் திகதிய 12/2007 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பு தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்ட பணிகளை அமுலாக்குவதற்கு எதிர்பார்த்தபோதும், 2013 மே 31 ஆந் திகதியளவிலும் செயற்திட்ட அமுலாக்கலால் நோக்கத்தை ஈடேற்ற முடியவில்லை.

i. எதிர்பார்த்த வருமானத்தைச் சேகரிப்பதற்கு முறையான முறைமையை நிறுவுதல்

ii. புதிய வியாபார நடவடிக்கைகளின் மூலம் வருமானத்தை உழைக்கும் வழி வகைகளை ஏற்படுத்திக் கொண்டிருத்தல்

iii. தொடர்ச்சியான அஞ்சல் திணைக்கள நட்டத்தைத் தவிர்த்து வருமானத்தையும் செலவினத்தையும் சமநிலையில் பேணுதல்

(ஆ) தபாலகங்களை இணையதளமயப்படுத்தும் பணிகளை ஒழுங்குபடுத்தும் ஓர் செயற்திட்டமாக ஈடுபடுத்தப்பட்ட பிலியந்தலை, மொறட்டுவை, கல்கிஸ்ஸ தபாலகங்களின் செயற்திட்ட நடவடிக்கைகளின் செயற்பாட்டை பரிசீலிக்கப்பட்டபோது கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தெரிவு செய்யப்பட்ட 10 அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் மத்திய அஞ்சல் பரிவர்த்ததனை நிலையத்திற்கான பதிவுத் தபால் நடவடிக்கைகள் மாத்திரமே இச்செயற்திட்டத்தின் கீழ் செயற்பட்டிருந்ததுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் மூலம் அறிமுகஞ் செய்யப்படவிருந்த 17 கணனி மொடியூல்கள் மூலம் வேறெந்த மென்பொருளும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பிலியந்தலை தபாலகத்திற்கு வழங்கப்பட்ட கணனிகளும் அவற்றுடன் இணைந்த உபகரணங்களும் மெதுவாகச் செயற்பட்டமையால் ஒரு பதிவுக் கடிதத்தைக் கணனி முறைமையில் உட் புகுத்துவதற்கு ஏறக்குறைய 7 நிமிடங்கள் ஆயின. ஆகவே, பதிவுக் கடிதங்கள் குறைவாகப் பெறப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே இம்முறை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) கல்கிஸ்ஸ அஞ்சல் அலுவலகத்தில் உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக இது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) மொறட்டுவை அஞ்சல் அலுவலகத்தில் தொகையாகப் பதிவுக் கடிதங்கள் பெறப்படும் சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் இது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.8 நட்டங்களும் இழப்புகளும்

கையிருப்பு இழப்பாக வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 815,000 புத்தகங்களில் பதிவழிப்புச் செய்யப்படுவதற்கு பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கோரப்பட்ட போதும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாகப் பொறுப்பு வாய்ந்த 3 உத்தியோகத்தர்களிடமிருந்தும் நூற்றுக்கு 50 சதவீதத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டு ஓய்வூதியப் பணிப்பாளர், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், ஸ்ரீலங்கா டெலிகொம் தலைவர் ஆகியோருக்கு 2013 ஜனவரி 8 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தவணைப் பணத்தை அறவிட்டு அஞ்சல் சேவைகள் அமைச்சிற்கு வரவு வைக்குமாறு குறித்த நிறுவனங்களுக்குத் தெரிவித்திருந்த போதும் 2013 ஏப்ரல் 19 ஆந் திகதியளவிலும் அத்தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை ஆரம்பித்திருக்க வில்லை.

## 1.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தபாலகங்களை இணையதளமயப்படுத்தும் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்குத் தேவையான 17 மொடியூல்களை அமைப்பதற்கு மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அதற்கமைய, மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு ரூபா 49 மில்லியன் கொடுப்பனவு செய்யப்படுவதற்கான இணக்கம் ஏற்பட்டது. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இத்தொகையில் ரூபா 39,200,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2013 மார்ச் 12 ஆந் திகதியளவிலும் இப்பதினேழு மொடியூல்களில் எதுவுமே அஞ்சல் திணைக்களத்திடமோ அல்லது தபால் சேவைகள் அமைச்சிடமோ ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அறிமுகஞ் செய்யப்பட்ட மொடியூல் செயற்படாமையால் இச்செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஆ) வன் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 71,537,790 செலவிடப்பட்ட போதும், அஞ்சல் அலுவலகங்களை இணையதளமயப்படுத்தும் செயற்திட்டம் முறையாகச் செயற்படாமையால் அவை குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| ஊழியர் வகையறா | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 12 | 11 | 1 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 3 | 2 | 1 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 52 | 43 | 9 | - |
| ஆரம்ப மட்டம் | 31 | 30 | - | 2 |
| ஏனையோர்(சமயாசமய) | - | 2 | - | 2 |
| தற்காலிகம் | - | 2 | 1 | - |
| மொத்தம் | 98 | 90 | 12 | 4 |

மீளாய்வாண்டு முடிவில் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 308 – அஞ்சல் திணைக்களம்

## 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அஞ்சல் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, கணக்கிணக்கக்கூற்று, ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டு கணக்கு மற்றும் வருவாய்க் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 03 ஆந் திகதியன்று திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள், கருத்துரைகள் மற்றும்

கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களது தெரிவுச் செவ்வைகளின் அடிப்படையிலானவை. அம் மீளாய்வினதும் பரிசீலனைகளினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்னும் வரையறைக்குட்பட விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

## 2.2 கணக்குகள் மற்றும் கணக்கிணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் கணக்கிணைக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரதும் கணக்கீட்டு உத்தியோகத்தரதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களற்ற கணக்குகள் மற்றும் கணக்கீட்டுக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்பித்தலுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் யாவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புரைகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அஞ்சல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் கணக்கிணைக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே(அ) முதல் (ஏ) வரையான பொது அவதானிப்புகள் மற்றும் கீழே 2.4 முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தவிர, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

2012 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகளைத் திணைக்களம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காதிருந்தது.

| **தலைப்பு/வருமானம்/சுட்டு/விடய இலக்கம்** | **கணக்கின் பெயர்** |
|---|---|
| 30801 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான கணக்கிணக்கக்கூற்று |

**(ஆ) பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2013 மார்ச 31 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 23,451,103 ஆகும்.

(இ) பாதீட்டு வேறுபாடுகள்

(i) பத்து செலவின விடயங்களுக்குக் கூடுதலாக ரூபா 150,960,000 கூட்டுத் தொகையுடைய நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் ரூபா 135,485,262 கூட்டுத்தொகையுடைய ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 15,474,738 எஞ்சியது. இது அச் செலவின விடயங்களுக்கான நிதியேற்பாட்டில் 7 முதல் 20 சதவீதம் வரையில் அமைந்திருந்தது.

(ii) அஞ்சல் திணைக்களம் மதிப்பீட்டைத் தயாரிக்கையில் இயலக்கூடிய அடிப்படையில் அல்லாது கற்பனை அடிப்படையிலேயே மதிப்பீட்டைத் தயாரித்தமையால், 7 செலவின விடயங்களுக்கு நிதிப் பிரமாணம் 66 மூலம் பிற செலவின விடயங்களிலிருந்து ரூபா 33,320,000 மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் 8 செலவின விடயங்களுக்கு ரூபா 505,039,000 பெறப்பட்டிருந்தது.

(ஈ) அரச செலவின முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டிற்கென பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 2011 திசெம்பர் 30 ஆந்

திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டில் வழங்கப்பட்ட நிதியில் மீண்டுவரும் மற்றும் மூலதன செலவினங்களில் முறையே 2 சதவீதம் மற்றும் 9 சதவீதம் என சேமிக்கப்படவேண்டும். எனினும், மீண்டுவருஞ் செலவினத்தில் திணைக்களம் 2 சதவீதத்தையே திணைக்களம் சேமித்திருந்தது.

(உ) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவின முகாமைத்துவம்

எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினத்திற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதி உள்ளடங்கலான செலவினம் முகாமைத்துவமிடப்பட வேண்டும் எனவும் அதன் பொருட்டு எதுவித மேலதிக தொகையும் வழங்கப்படமாட்டாது எனவும் நிதிப் பிரமாணம் 66 மாற்றங்களைத் திறைசேரி அங்கீகரிக்காது எனவும் 2012 பெப்ரவரி 16 அந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டபோதும், அதனைக் கருத்திற்கொள்ளாது அவ்விடயங்களுக்கு நிதிப்பிரமாணம் 66 மூலம் ரூபா 6,000,000 மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது.

(ஊ) பொது வைப்புக் கணக்கு

இரண்டு ஆண்டுகளைக் கடந்துவிட்ட ரூபா 6,857,976 க்கான 106 வைப்புகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(எ) வருமானக் கணக்குகள்

(I) வருமானம் மதிப்பீடு செய்யப்படுகையில் இயலக்கூடிய எண்ணிக்கை பயன்படுத்தப்படாது கற்பனையான எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டமையால், 23 செலவின விடயங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(II) 2012 ஆம் ஆண்டிற்கான தனியார் நிதி நிறுவனம் ஒன்றின் நிலுவையாக உள்ள தரகு வருமான நிலுவையான ரூபா 1,410,049 கணக்கில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(III) இலங்கை அஞ்சல் திணைக்களம் 191 நாடுகளுடன் தனது சேவைகளைப் பரிமாற்றுஞ் செய்வதன் மூலம் ரூபா 80,370,980 வருமானத்தை ஈட்டியபோதும், ரூபா 109,881,152 நிலுவையாக இருந்தது.

(IV) அஞ்சல் திணைக்களத்தின் மூலம் வெளிநாட்டு வங்கி ஒன்று காசையும் காசோலைகளையும் வைப்புச் செய்யும்போது ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை அவ்வங்கியின் அறிக்கைகளின் பிரகாரமும் அஞ்சல் திணைக்கள அறிக்கைகளின் மூலமும் முறையே ரூபா 74,748 ரூபா 74,491 ஆகவிருந்தன. எனினும், இதற்கான காரணத்தை அஞ்சல் திணைக்களம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஏ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக்கூற்று

---

(I) விடய இலக்கம் 30801 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக்கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் உள்ளவாறு அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 60,120,416 ஆகும். அந்நிலுவை மீதியை அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

(II) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை 142 க்கமைய, 2009 ஜனவரி 1 முதல் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்படக்கூடிய அதிகூடிய இடர்கடன் ரூபா 250,000 ஆகும். என வரையறுக்கப்பட்டபோதும், அவ்வெல்லைக்கும் அதிகமாக 14 திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

(III) இனங்காணப்படாத மீதிகள்

---

கண்டி, குருநாகல், மட்டக்களப்பு ஆகிய மாவட்டக் கணக்கீட்டு அலுவலகங்கள் மூன்றின் ரூபா 5,125,682 நிலுவை சம்பந்தமாகக் கடைசித் தவணைப் பணமாக அறவிடப்பட்ட கடன் தொகையையும் கடன் மீதிகளது காலப் பகுப்பாய்வையும் காண்பித்திராமையாலும் முற்பணப் பதிவேட்டைப் பாதுகாப்பின்றிப் பேணியமையாலும் பயனுள்ள விதத்தில் கணக்காய்வை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(IV) அறவிடப்படாதிருக்கும் மீதிகள்

(i) ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருக்கும் கடன் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 26,660,614 ஆகும்.

(ii) 05 முதல் 25 ஆண்டுவரையாகத் தொடர்ச்சியாக தீர்த்து வைக்கப்படாதிருக்கும் 11 மாவட்டக் கணக்கீட்டு அலுவலகங்களது தொகை ரூபா 18,037,023 ஆகும்.

## 2.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள் மாகாண சபைப் பிரதான செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் என்பவர்களுடன் தொடர்படுத்தப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய, 2010 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று ஆண்டின் ஆரம்பத்திலே திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டும். எனினும், அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தது.

### 2.4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 2.4.1 பந்தியில் குறிப்பிடப்படும் பொது நிதிப் பணியாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஒன்றிணைந்த திட்டத்திற்கு அனுசரணையாக 2010 மற்றும் எதிர்வரும் காலங்களில் திணைக்களம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டின் பொருட்டுத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத்திட்டம் 2012 செப்தெம்பர் 14 அன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.4.3 உள்ளகக் கணக்காய்வு

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களது எண்ணிக்கை 40 ஆகும். எனினும், மீளாய்வாண்டின் போது 10 உத்தியோகத்தர்கள் மாத்திரமே இப்பிரிவில் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர். இதன் காரணமாக, ஆண்டின் போது ஆக்கபூர்வமானதும் வினைத்திறன் மிக்கதுமான கணக்காய்வை மேற்கொள்ளமுடியாது போயிற்று.

(ஆ) கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்களுக்கமைய, கீழே குறிப்பிடப்பட்ட பணிகள் தொடர்பாகப் பரிசீலிக்கத் திட்டமிடப்பட்ட போதும், 2012 ஆம் ஆண்டின் போது அப்பணிகள் நடைபெற்றிருக்கவில்லை.

i. திட்டமிடப்பட்டவாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுகின்றனவா என்பதைப் பரிசீலித்தல்

ii. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக்கமைய செயற்பட்டதா என்பதைப் பரிசீலித்தல்

iii. நிலுவையாக உள்ள உறுதிச் சான்றுகளைப் பரிசீலித்தல்

iv. முகவர் சேவைகள் மூலம் சேகரிக்கப்படும் வருமானம் கணக்கிலிடப்படலும் அவை அனுப்பி வைக்கப்படுவதைப் பரிசீலிப்பதும்.

### 2.5 சொத்து முகாமைத்துவம்

#### (அ) வருடாந்த பொருட் கணிப்பை மேற்கொள்ளுதல்

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/பொருட் கணிப்புச்சபை 01 எனும் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருட் கணிப்பு 2013 மார்ச் 31க்கு முன்னர் நடாத்தப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அஞ்சல் திணைக்களத்தின் கீழுள்ள 5 மாவட்டக் கணக்கீட்டு அலுவலகங்கள் பொருட்கணிப்பு அறிக்கைகளை 2013 மே 31 ஆந் திகதியளவிலும் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) 2012 திசெம்பர் 31 ஆந் திகதிய பொருட் கணிப்புச் சபை அறிக்கையின் பிரகாரம், நெடுங்காலமாகக் களஞ்சியத்தில் இருத்தல், கிரமமாகக் களஞ்சியப்படுத்தப்படாமை, வழங்கலின் போது முறையான நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படாமை மற்றும் நிர்வாகம் இவை தொடர்பாக முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை போன்ற காரணங்களால் ரூபா 440,423 பெறுமதியான முத்திரைகள் பழுதடைந்து போயிருந்தன.

(iii) அச்சிடலின் போதான தவறுகள் காரணமாக ரூபா 45,919 பெறுமதியான முத்திரைக் கையிருப்பு முத்திரைக் களஞ்சியத்தில் இருந்ததுடன் அதனால் அஞ்சல் திணைக்களத்திற்கு ஏற்பட்ட இழப்பு அதற்குப் பொறுப்பான நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

(iv) பாவனையற்று இருக்கும் முத்திரை அச்சிடப்பட்ட கடித உறைகள் மற்றும் ஞாபகார்த்தப் பிரசுரங்கள் என்பவற்றினது பெறுமதி ரூபா 2,310,203 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்**

அஞ்சல் திணைக்களம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்காத பொறுப்புகள் ரூபா 256,719,532 ஆகும்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மூலதனச் சொத்துக்களது புனரமைப்பு மற்றும் முன்னேற்றம் கீழான செலவின விடயம் 308-1-1-2003 க்கான சேமிப்பு ரூபா 948,905 ஆகும். எனினும் ரூபா 3,346,142 க்கான பொறுப்புகள் உருவாகியிருந்தன.

ii. நிதிப் பிரமாணம் 94(2) இன் பிரகாரம் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 50 சதவீதத்திற்கு மேற்படாத வகையில் சேமிப்பிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினத்திற்கான பொறுப்புகளுக்கு உள்ளாகலாம். எனினும், அறக்கொடுப்பனவு மற்றும் உதவு தொகை

என்பவற்றிற்கான செலவின விடயம் 308-1-1-1-1505 இன் கீழான சேமிப்பு ரூபா 213,802 ஆகிய போதும், கூடுதலான பொறுப்புக்குள்ளான தொகை ரூபா 3,480,718 ஆகவிருந்தது.

iii. வெளிக்கொணரப்படாத பொறுப்புகளது பெறுமதி ரூபா 25,522,951 ஆகும்.

**2.6 இணங்காமை**

**சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) தாபனவிதிக் கோவை | | |
| அத்தியாயம் XXIV பந்தி 4.8 | 609,056 | கூட்டுத்தாபனங்கள், சபைகள் என்பவற்றிற்கு விடுவிக்கப்படும் போது விடுவிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே மொத்தக் கடனும் அறவிடப்படவேண்டும். எனினும், ஒரு ஊழியரிடமிருந்து அறவிடப்படவேண்டிய சொத்துக் கடன் மீதி அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| அத்தியாயம் XXIV பந்தி 4 அத்தியாயம் V இன் 7.1 | 28,538,135 | ஓய்வுபெற்ற, மரணமடைந்த உத்தியோகத்தர்கள் பொருட்டான கடன் மீதி அறவிடப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை<br>------------------------------------------------ | | |
| | 2010 மே 31 ஆந் திகதிய - SP/SB/03/10 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் “ஈ” அரசாங்க கொள்கை இலக்கம் 02040203 பந்தி என்பன | | “ஈ” அரசாங்க கொள்கையின் பிரகாரம், மென் பொருளில் இருக்க வேண்டிய மாதிரிகளின் படி, முறையான நியமத்துடன் வேலை முடிவுற வேண்டும். அத்துடன் அதற்கான உத்தரவாதக் காலமும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவேண்டும். எனினும், காசுக் கட்டளைக் கொடுக்கல் வாங்கல் பதிவுகளை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் MOMS மென் பொருள் தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பொது நிதிச் சுற்றறிக்கை<br>-------------------------------------------- | | |
| | 2012 ஜுலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | 88,426,413 | வருமானம் குறைவடைந்தமை தொடர்பாக ஆலோசனையைப் பெற்று அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை<br>------------------------------------------------ | | |
| | 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்கம் | 1,214,918 | உத்தியோகத்தர் ஒருவர் மாற்றலாகி 2 மாதங்களுக்குள் கடன் மீதி தீர்த்து வைக்கப்படாதவிடத்து மாதாந்தக் கணக்கீட்டுப் |

பொழிப்பினூடாக அறவிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 2.7 செயற்திட்ட அமுலாக்கலில் தாமதம்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது கைவிடல், செயற்திட்டத் தாமதம் என்பன தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது புலனாகிய சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

திணைக்களம் கீழே குறிப்பிட்ட செயற்திட்டங்களை ஆரம்பித்திருக்கவில்லை.

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி** | **ஆரம்பிக்காமைக்கான காரணம், சுருக்கமாக** |
|---|---|---|---|
| திரப்பனே தபாலகக் கட்டிட நிர்மாண வேலை | 3,751,690 | 2011.12.19 | காணியின் உரிமை தீர்த்து வைக்கப்படாமை |

(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் செயற்திட்டங்களைத் திணைக்களம் நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **ஆரம்ப திகதி** | **முடிவுற வேண்டிய திகதி** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம்** | **தாமதத்திற்கான காரணம்** |
|---|---|---|---|---|---|
| சிப்பிக்குளம் தபாலக நிர்மாண வேலை | 6,839,655 | 2011.07.01 | 2012.01.31 | 7,339,912 | நிர்மாணவேலைத் தாமதம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பேமடுவ தபாலக நிர்மாண வேலை | 8,054,630 | 2011.07.01 | 2012.01.31 | 8,783,295 | -மேற்படி- |
| பதவிய பராக்கிரமபுர தபாலக நிர்மாண வேலை | 6,885,597 | 2011.07.01 | 2012.01.31 | 3,549,336 | -மேற்படி- |
| தொம்பகஹவெல தபாலக நிர்மாண வேலை | 6,890,510 | 2011.07.01 | 2012.01.31 | 1,498,176 | -மேற்படி- |

## 2.8 செயலாற்றல்

2012 வருடாந்த மதிப்பீடு/ஒன்றிணைந்த திட்டம் / செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புரைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வருடாந்த வருமானம்

(i) தபாலகத்தால் சம்பாதித்த வருமானம் கடந்த 4 ஆண்டு காலத்துடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **2012** | **2011** | **2010** | **2009** |
|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா மில்லியன்) | 4,952 | 4,409 | 4,572 | 4,546 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2012 ஆம் ஆண்டின் வருமானம் ரூபா 543.5 மில்லியன் தொகையால் அதிகரித்துள்ளது. கூடுதலாக முத்திரை அச்சிடப்பட்டமையே வருமான அதிகரிப்பிற்கான காரணமாகும்.

(ii) மீளாய்வாண்டின் போது திணைக்களம் சம்பாதித்த 10 வருமான விடயங்களின் வருமானம் 2011 ஆம் ஆண்டன் ஒப்பிடுகையில் ரூபா 22,968,162 ஆல் குறைவடைந்திருந்தது.

(iii) திணைக்களம் தயாரித்த வணிகக் கணக்குத் தகவல்களின் பிரகாரம் கடந்த 3 ஆண்டுகளின் போதான நட்டம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| நட்டம் (ரூபா மில்லியன்) | 3,426 | 3,432 | 2,839 |

## 2.9 வங்கிக் கணக்குச் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகள்

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்கப்பட்டு 6 மாதங்களாகியும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 13 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 985,674 பெறுமதியான 82 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 க்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) மாவட்டக் கணக்கீட்டு அலுவலகங்களில் 5 நடைமுறைக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டு 6 மாதங்களின் பின்னரும் தேறாதிருந்த ரூபா 1,628,985 பெறுமதியான 33 வைப்புக்கள் காணப்பட்டன.

(இ) 2012 திசெம்பர் மாதத்தில் தயாரிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்றில் 4 வங்கிக் கணக்குகளில் ரூபா 2,158,519 பெறுமதியான இனங்காணப்படாத செலவு மீதிகளும் 25 வங்கிக் கணக்குகள் தொடர்பில் ரூபா 381,271 பெறுமதியான இனங்காணப்படாத வரவு மீதிகளும் காணப்பட்டன.

## 2.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அஞ்சல் அலவலகம் காசுக் கட்டளை முகாமைத்துவம் (Money Order Management) அல்லது MOMS எனும் மென் பொருள் தயாரிப்பு உற்பத்தி மற்றும் மென் பொருள் செயற்பாடு தொடர்பாக இணையதள தொடர்புகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 10,001,000 செலவிடப்பட்டிருந்தது. உற்பத்தியான மென் அணி குறித்த பணிக்குப் பொருத்தமற்றதாக இருந்தமையால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.11 மோசடித் தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல்கள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஜனவரி 03 ஆந் திகதியன்று ஹெவ்லொக் டவுன் தபாலகத்தின் காசு மற்றும் முத்திரைகள் என்பன நேரடியாகப் பரிசீலனை செய்யப்பட்ட போது ரூபா 7,044,076 க்கான காசு மற்றும் முத்திரைக் குறைவு காணப்பட்டது.

(ஆ) முத்திரைக் களஞ்சியத்திலிருந்து பெறப்படும் முத்திரைகளைப் பொறுப்பேற்று வழங்குவதற்கான குறிப்புகளையிடும் பதிவேட்டில் 5 தாள்கள் அகற்றப்பட்டிருந்தன.

(இ) உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் முத்திரை பொறிக்கப்பட்ட பிரச்சினைக்குரிய முத்திரைக் கையிருப்பு ஹெவ்லொக் டவுன் அஞ்சலதிபரால் அத்துமீறலாக அகற்றப்பட்டு தபாலக முத்திரைக் கையிருப்பில் கலந்து வைக்கப்பட்டிருந்தது.

## 2.12 இழப்புகளும் நட்டங்களும்

தெரிவுச் செவ்வைகளின் போது புலனாகிய இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காணப்படுகின்றன.

(அ) திரப்பனே தபாலக நிர்மாண வேலைக்கு ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணம் ரூபா 750,338 ஆகும். இதில் ரூபா 540,213 மாத்திரம் சிப்பிக்குளம் தபாலக நிர்மாண வேலைக்கான இறுதி விலைப்பட்டியலிருந்து அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, திணைக்களத்திற்கு ரூபா 250,125 இழப்பு ஏற்பட்டிருந்தது. மேலும், குறித்த தபாலக நிர்மாண வேலைக்கு வழங்கிய முற்பணம் நிர்மாண வேலை மேற்கொள்ளப்படாமையால் மீள அதனைத் திணைக்களம் திருப்பிப்பெற நடவடிக்கை எடுக்காது ஓராண்டிற்கும் மேலாக அது ஒப்பந்தக்காரரிடம் இருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட தவறுகளுடன் அச்சிடப்பட்டிருந்த 53,500 முத்திரையிடப்பட்ட கடித உறைகளுக்கான ரூபா 81,828 இழப்பை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாளிகாவத்தை, மினுவங்கொடை, கெலிஓயா எனும் 03 தபாலகங்களுக்குரிய ரூபா 984,220 காசுக் குறைவு காணப்பட்டதுடன் அவ் இழப்புகளை அவற்றிற்குப்

பொறுப்பான நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(உ) மாளிகாவத்தை அஞ்சல் அலுவலகத்தில் ரூபா 19,920 முத்திரைக் குறைவு ஏற்பட்டது. அந்நட்டத்தை குறித்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இப்பலோகம, கொழும்பு தெற்கு கணக்கு அலுவலகம், வெலிமடை, பன்வில, சிலாபம் ஆகிய 5 தபாலகங்களில் ரூபா 2,662,353 க்கான இழப்புகள் அவதானிக்கப்பட்டன.

(எ) பல்வேறு நபர்கள் அஞ்சல் திணைக்களத்தினூடாக பிற நாடுகளுக்குப் பொருட்களை அனுப்பும் போது அப் பொருட்கள் பெறவேண்டியவர்களைச் சென்றடையாமையால் இழப்பீடாக ரூபா 66,145 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 2007 ஜனவரி 01 முதல் 2012 திசெம்பர் 31 வரை 45 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட வாகன விபத்துக்களால் ஏற்பட்ட இழப்பு ரூபா 5,297,609 ஆகும். அவ்விழப்பைக் குறித்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஐ) தீவிரவாத நடவடிக்கைகளாலும் சுனாமி அனர்த்தத்தினாலும் 1987 ஆம் ஆண்டிலிருந்து நிலவிவரும் இழப்பு மற்றும் கைவிடல் காரணமாக ரூபா 50,758,116 பதிவழிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்ட போதும் அத்தொகையைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2006 ஜனவரி 25 ஆந் திகதிய NPA/CEO/18 இலக்க அரசாங்க பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1(ஏ) மற்றும் 7.9.10 பந்தியின் பிரகாரம் கேள்விகளை மதிப்பாய்வு செய்கையில் எப்போதும் கேள்வி நிபந்தனைகளுக்குட்பட்ட அதிகுறைந்த விலை தெரிவு செய்யப்பட வேண்டுமாயினும், மத்திய அஞ்சல் பரிவர்த்தனை அதிவேக அஞ்சல் பிரிவு நவீனமயப்படுத்தலுக்கான கொள்வனவு நடைமுறையின் போது அவ்வாறு செயற்படாது இரண்டாவது ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்குக் கேள்வி வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட இழப்பு ரூபா 410,398 ஆகும்.

## 2.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2012 உலக அஞ்சல் தினக் கணக்காட்சிக்கு ரூபா 960,000 செலவில் விற்பனைக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட 3,000 பேனை வைக்கும் பெட்டிகளில் 2,869 பெட்டிகளும் விற்பனை செய்யப்படாது எஞ்சியமையால் அதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 918,080 பயனற்ற செலவினமாகியது.

## 2.14 முகாமைத்துவ நலிவுகள்

(அ) உலக அஞ்சல் சங்கத்தால் 2009 ஆம் ஆண்டில் அஞ்சல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கிய உதவியில் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய மீதி ரூபா 27,255,851 ஆகும். அத்தொகை 2013 ஜுன் 28 ஆந் திகதியளவிலும் அஞ்சல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறாக உதவித் தொகையை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தாமையால் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளில் உலக அஞ்சல் சங்கம் வழங்கும் உதவிகள் அஞ்சல் திணைக்களத்திற்குக் கிடைக்காது போயிற்று.

(ஆ) ஐந்து ஆண்டுகால வெளிநாட்டு வேலைவாய்ப்பு லீவைப் பெற்று சேவை நீங்கிய பெண் உத்தியோகத்தர் ஒருவர் தமது லீவின் பின்னர் 2012 பெப்ரவரி 02 தொடக்கம் 120 மாதங்கள் கட்டாயமாகக் கடமையாற்ற வேண்டுமென உடன்பட்டிருந்த போதும், சேவைக்குத் திருப்பாமையால் அவரிடமிருந்து அறவிடவேண்டிய தண்டப்பணமாகிய ரூபா 650,090 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய 3 நாடுகளுக்கு பிரதிநிதித்துவ அடிப்படையில் முத்திரை விற்பனை செய்யப்பட்ட போதும் அவ்வாண்டிற்குப் பின்னர் அவ்விற்பனை இந்தியாவுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டதால் திணைக்களத்திற்கு பெருமளவு வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஹெவ்லொக் டவுன் தபாலகத்தில் இருக்கவேண்டிய முத்திரைப் கையிருப்பு பெறுமதி ரூபா 500,000,000 இற்கு வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் 2010 நவெம்பர் முதல் இவ் வரையறைக்கு மேலதிகமாக முத்திரைக் கையிருப்பு பேணப்பட்டிருந்தது.

(உ) ஹெவ்லொக் டவுன் தபாலகம் 2006 முதல் 2013 ஜனவரி 02 வரை பிரதேச அஞ்சல் அத்தியட்சகரின் மேற்பார்வைக்குள்ளாகாதிருந்தது. மேலும், இல் அஞ்சல் அலுவலகத்தின் முத்திரைப் பெறுவனவு தாமதமாகிக் கணக்கிலிடப்படுவது தொடர்பாகவும் முதல் நாள் அனுப்புதல்கள் தாமதமாகக் கணக்கிலிடப்படுவதும் தொடர்பாக கணக்காளர் (முத்திரை) பிரதேச அஞ்சல் அத்தியட்சகருக்கு அறிவித்திருந்த போதும், அது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உலக அஞ்சல் தினத்தையொட்டி முத்திரைப் பெக்கட்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 998,725 பெறுமதியான முத்திரைக் கையிருப்பில் ரூபா 587,875 பெறுமதியான முத்திரைகள் மாத்திரமே, முத்திரைப் பெக்கட்களைத் தயாரித்துக் களஞ்சியத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ரூபா 410,850 பெறுமதியான முத்திரைக் கையிருப்பு களஞ்சியத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை.

(எ) பல்வேறு நிறுவனங்களுக்கு அஞ்சல் திணைக்களம் முகவர் சேவைகளை வழங்கியிருந்தது. எனினும் அச்சேவைகளுக்காகப் பெறும் வருமானமும் அவற்றிற்கான செலவினமும் முறையாக இனங்காணப்படும் வகையில் வேறாக வருமானச் செலவினக் கணக்கு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இச்சேவையினூடாக ஆக்கபூர்வ நலன் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றதா என நிர்ணயிக்க முடியாதிருந்தது.

(ஏ) பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம், மாவட்டக் கணக்காளர் அலுவலகம் மற்றும் மாவட்ட நிர்வாக அலுவலகம் எனும் பிரிவுகளை அஞ்சல் திணைக்களம் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் மேலதிக நேர வேலைக்கெனச் செலவாகும் தொகையை வெவ்வேறாக அறியும் பொருட்டான இனங்காணக்கூடிய வெவ்வேறு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, முறையான உள்ளகக் கட்டுப்பாடின்றி மேலதிக நேர வேலைகளுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஐ) 2012 ஆம் ஆண்டிற்கான காசுக் கட்டளைக் கணக்கிணக்கக்கூற்று 2013 யூன் 28 அந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தது.

(ஒ) சிப்பிக்குளம், பேமடுவ தபாலகங்கள் மற்றும் பதவிய பராக்கிரமபுர உப தபாலகக் கட்டிட நிர்மாண வேலைகள் தாமதமானமையால் திணைக்களத்தால் அறவிடப்பட வேண்டிய கால தாமதக் கட்டணமான ரூபா 2,099,766 ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், மத்திய அஞ்சல் பரிவர்த்தனை அதிவேக அஞ்சல் பிரிவை நவீனமயப்படுத்தும் பணிகளுக்கான தாமதக் கட்டணமான ரூபா 170,352 அறவிடப்படுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.15 மனிதவள முகாமைத்துவம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிட எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 121 | 75 | 46 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 147 | 62 | 85 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 8,854 | 6,741 | 2,113 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 17,659 | 16,954 | 705 |
| (v) | பிற(அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 4,788 | 4,788 | - |
| | மொத்தம் | 31,569 | 28,620 | 2,949 |